அண்ணா நினைவு நாள்! கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் திண்டுக்கல்லில் அமைதிப் பேரணி!

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!





திண்டுக்கல்,பிப்.2-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளான நாளை (03.02.2025, திங்கட் கிழமை) காலை 9.00 மணியளவில் கழக துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி, அவர்களின் தலைமையிலும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி MLA., திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான I.P.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் ஆகியோரின் முன்னிலையில் மாநகராட்சி அலுவலகம், மணிக்கூண்டிலிருந்து அமைதிப் பேரணியாகச் சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், துணை மேயர், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.








